

**தங்கள் வழிபாட்டு முறை, குலதெய்வம், சந்தித்த மகான்கள், நேர்ந்த அதிசயங்கள் உள்பட தங்களுக்குள் இருக்கும் ஆன்மிக விஷயங்களை வி.ஐ.பி.க்கள் நம்மோடு பகிர்ந்து கொள்ளும் சிலிர்ப்பான பகுதி இது.**

“ஓம் சரவண பவ எனும் திருமந்திரம்தனை சதா ஜபி என் நாவே..” - மெய்மறந்து சண்முக ப்ரியாவை கணீரென்று சுதா ரகுநாதன் இழைத்த போது, அந்த வீடு முழுக்க ஓம் என்ற பிரணவ மந்திரம் ஒலிப்பது போன்ற பிரமை. சென்னை, தேனாம்பேட்டை செனடாப் ரோட்டிலுள்ள தனதுபுதியவீட்டின் அழகானபூஜையறையில்தான் சுதா பாடிக் கொண்டிருந்தார். ஒரு வழியாக காலை பூஜையை முடித்துவிட்டு தலையில் கட்டியிருந்த ஈரத்துணியை அவிழ்த்தபடி நம்மிடம் பேசினார்.

“ஆன்மிகத்தைப் பற்றியும், பூஜை, புனஸ்காரங்களைப் பற்றியும் பேசினாலே எனக்கு எப்பவுமே சட்டென்று என் பெங்களூர் நாட்கள்தான் நினைவுக்கு வரும். அந்த பாக்யம் எனக்கு மட்டும் எப்படிக் கிடைச்சுது? திரும்பத் திரும்ப எனக்கு நானே கேட்டு பூரிச்சுப் போகும் விஷயம் இது.

ஸ்ரீ சத்ய சாய்பாபா ஒயிட் ஃபீல்டுக்கு வரதுக்கு முன்னாடி குமர பார்க் பகுதியில் ஒரு

பெரிய வீட்டின் மாடியில் இருந்தார். அதே வீட்டின் கீழே எங்கள் குடும்பம். அதாவது நான் பிறக்கறதுக்கு முன்னாடியே சாய்பாபா அங்கேதான் இருந்தார். நான் பிறந்தவுடன் எங்க அப்பா, அம்மா அவர் மடியில்தான் உட்கார வச்சு பேர் வைக்கச் சொன்னார்கள். அவர் ஒரு நிமிஷம் கண்ணை மூடிவிட்டுத் திறந்து சொன்ன பெயர் கீத சுதா! இப்பவும் அவர் என்னை கீதான்னுதான் கூப்பிடுவார். (ஒரு கட்டத்தில் அவரே என்னிடம் இந்த உலகம் உன்னை சுதா என்றே கூப்பிடட்டும் என்றார்)

காது குத்தல், அட்சர அப்பியாசம் எல்லாம் அவர் மடியிலதான். கிட்டத்தட்ட ஆறு வயசு வரை நான் பாபாவின் அறையில் ஓடி விளையாடியிருக்கிறேன். அந்த வாழும் மகானின் மகிமை புரியாமலேயே அவரோடு இருந்திருக்கிறேன் என்பதை இப்போது நினைத்தாலும் உடம்பு சிலிர்க்கிறது. கண்கள் கலங்குகின்றன. இப்போது சொல்லுங்கள். நான் பாக்யசாலிதானே!

எங்கள் குலதெய்வம் கரூர், தான்தோன்றிமலை கல்யாண வெங்கட்ரமண



# தெய்வீக ராகம்

Distributor in Tamil Nadu Contact : 044-2669 1120, 97103 63991
E-MAIL : khusal_health_care@yahoo.com









பெருமாள். முடிந்தவரை வருஷத்திற்கு ஒரு தடவை குடும்பத்தோடு போய்விடுவோம். என் குழந்தைகள் மாளவிகா, கௌசிக் இருவருக்கும் காது குத்தி, மொட்டை போட்டதெல்லாம் அங்கேதான்! தீராத பிரச்னை அல்லது மனச்சங்கடம் வந்தால் சட்டென்று 'கிளம்பு... குலதெய்வத்தைப் பார்த்துட்டு வந்துடுவோம்' என்று கிளம்பிவிடுவார் கணவர் ரகு.

என்னைப்பொறுத்தவரை பிரார்த்தனையும், சங்கீதமும் மனதிலுள்ள இறுக்கத்திற்கும் கவலைக்கும் மாமருந்து என்று சொல்வேன். வீட்டிலிருந்தால் எப்போது பார்த்தாலும் நான் பாடிக் கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும் இருப்பதால் எங்கள் வீட்டில் சதா இறைவனின் நாமம் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஒரு விதத்தில் நாள் முழுக்க பூஜைதான்! காலையில் குளித்து முழுகிவிட்டு குறைந்தது ஏழு மணிக்கெல்லாம் கடவுள் முன்பு உட்கார்ந்துவிடுவேன்.

வினாயகர்மேல் ஆரம்பித்து சரஸ்வதி, லட்சுமி, முருகன், தட்சிணாமூர்த்தி என்று ஒவ்வொரு தெய்வத்தின் மீதும் குட்டி குட்டி ஸ்லோகங்களாக சொல்லி இறுதியில் வள்ளலார், மகா பெரியவர், பாபா என்று தெய்வீக அவதாரங்களையும் வேண்டிவிட்டு 'பூஜ்யாய ராகவேந்திராய' சொல்லி முடிப்பேன். அப்புறம் கற்பூர ஆரத்தி! தினமும் சுமார் அரை மணி நேரம் இந்தப் பிரார்த்தனை நடக்கும். உலகத்தின் எந்த சீமையில் இருந்தாலும் அது எவ்வளவு குளிர்ப் பிரதேசமாக இருந்தாலும் பூஜையை மட்டும் நான் விடுவதில்லை.

சரியான தருணத்தில் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் அருட்பார்வை என்மேல் பட்டது. இதுவும் என் பாக்யம்! பத்து வருஷம் முன்பு வெள்ளியங்கிரிமலை அடிவாரத்தில் கம்பீரமான அந்த தியான லிங்கத்தின் திறப்பு விழாவில் முதன் முதலாக நான் பாடியதை பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கிறேன். 'சர்வம் பிரம்ம மயம்,' 'சாந்தி நிலவ வேண்டும்' ஆகிய பாடல்களை மனமுருகிப் பாடியது இன்றும் நெஞ்சிலேயே உள்ளது.

இந்த நவராத்திரியின்போது ஒவ்வொரு நாளும் தேவி கீர்த்தனைகளை நிறைய பாடுகிறேன். அது ஒரு விதத்தில் என் கச்சேரிகளுக்கு சாதகம் செய்வது போலவும் அமைந்துவிடுகிறது. கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர், நெல்லை என்று நான் பாடாத கோயில்கள் இல்லை. நெல்லை காந்திமதி கோயில் கும்பாபிஷேகத்திற்கும், கும்பகோணம் கும்பேஸ்வரன் கும்பாபிஷேகத்திற்கும் அண்மையில் பாடியது மறக்க முடியாத அனுபவம்.

கர்நாடக சங்கீதமே பக்தி இசைதானே! ஆக வீட்டிலும் பாட்டு... வெளியே மேடையிலும் பாட்டு. நான் கொடுத்துவைத்தவள். "குறையொன்றும் இல்லை... மறைமூர்த்தி கண்ணா..." - உருகுகிறார் சுதா.

**- வி. சந்திரசேகரன்**

**படங்கள் : சித்ரம் மத்தியாஸ்**